செய்தி வெளியீடு எண்: 943 நாள்: 25.10.10.

**அரசுப் பணியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குப்**
**போக்குவரத்துப் பயணப்படி 1000 ரூபாய் என உயர்த்தியமைக்காக**
**மாற்றுத் திறனாளிகள் சங்கங்கள் சார்பில்**
**முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி !**

அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், அரசு உதவிபெறும் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியவர்களில் மாற்றுத் திறனாளிகளாக உள்ளவர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்துப் பயணப்படி 300 ரூபாய் என்பதனை 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கி ஆணை பிறப்பித்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (25.10.2010) தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத் திறனாளர் அரசுப் பணியாளர்கள் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் பொறியாளர் ஆவின் திரு.கி.கோபிநாத், பொதுச் செயலாளர் திரு.அ.கணேசன், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலப் பொதுச் செயலாளர் திரு.பி. சிம்மசந்திரன், பொருளாளர் திரு.ப.சந்திரகுமார், தமிழ்நாடு அனைத்துப்பணி மாற்றுத் திறனாளிகள் நலச்சங்கத் தலைவர் திரு.கே.சீனிவாசன், துணைத்தலைவர் திரு.எஸ். பூபதி, தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் மற்றும் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் திரு.ரெ.தங்கம், திரு.என்.பாலமுருகன், சென்னை மாநிலக் கல்லூரியில் ஆங்கிலத்துறைப் பேராசிரியராகப் பணிபுரியும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி திரு.சகாதேவன் உட்பட பல்வேறு மாற்றுத் திறனாளிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்பொழுது, மாற்றுத் திறனாளிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செய்துவரும் பல்வேறு உதவிகள், சலுகைகள் மற்றும் திட்டங்களால் மாற்றுத் திறனாளிகள் மிகவும் மகிழ்ச்சியோடு இருப்பதாகத் தெரிவித்து தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தினர்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9